ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================================

## அறிவுரை 40. அஞ்சலி செய் பெருமாளுக்கு.

பெருமாளுக்குக் கை கூப்பி அஞ்சலி செய்ய வேண்டும்.

கண்ணன் கழலிணை கூப்பிய கையின் பெருமைதனை
எண்ணம் கடக்க எமுனைத் துறைவர் இயம்புதலால்

- அம்ருதாஸ்வாதினி

ஆளவந்தாரின் ஸ்தோத்ரரத்நத்தில் ஒரு ச்லோகத்தில் அஞ்சலியின் வைபவம் பேசப்படுகிறது. அதற்கு உரையாக அமைந்தது ஸ்வாமி தேசிகனின் அஞ்சலிவைபவம். அதன் கடைசிப் பாசுரப்பகுதி மேலே தரப்பட்டுள்ளது. இதன் அர்த்தம்:

கையைக் கூப்புவது அஞ்சலி. இதைக் கண்ணன் திருவடிகளுக்குச் செய்யவேண்டும். அப்போது அதன் பெருமை எண்ணற்கரியதாக ஆகும். இவ்வாறு யாமுநார்யர் அருளுகிறார்.

என்னென்ன பெருமை தெரியுமா? 1. விரைவில் பலன் தருதல். 2. எல்லாப் பாவங்களையும் போக்குதல். 3. எல்லா மங்களங்களையும் உண்டாக்குதல். 4. தன் தொடர்புள்ளவரையும் காப்பாற்றுதல். 5. அழியாப்பலன் தருதல் என்று எத்தனையோ. இதெல்லாம் அந்த ச்லோகத்தில் ஆளவந்தார் சொன்னவை.

*****************